# ‘திராவிட மாடல்’ அரசின் எடுத்துக்காட்டுதான் நலத்திட்ட நிகழ்ச்சிகள்!

## சென்னையில் – 1400 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,நவ.28-**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளையொட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை பெரியார் திடலில் நேற்று நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு கழகத்தின் 100 மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கி, அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றார்.**

**இதனைத் தொடர்ந்து, கல்லூரி மாணவ - மாணவியர் 250 பேருக்கு கல்வி உதவித் தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 50 மகளிர் சுய உதவிக்குழுக்கள் - 100 திருநங்கைகளுக்கு உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் என சுமார் 1400 பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

அமைச்சர் சேகர்பாபு அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்கிறார். அவர் பேசும்போது சொன்னார், பிறந்தநாளுக்காக நான் கலந்துகொள்கின்ற முதல் நிகழ்ச்சி என்று. அதில் சின்னத் திருத்தம். முதல் நிகழ்ச்சி இல்லை. ஒரே நிகழ்ச்சி இது மட்டும்தான். வேறு எந்த நிகழ்ச்சியிலும் என் பிறந்தநாளுக்காகக் கலந்து கொள்வதில்லை.

### தந்தை பெரியார் திடல்

கழகத்தினரின் வாழ்த்துகளை வாங்குவேன். அமைச்சர் சேகர்பாபு அவர்கள் அழைத்ததால், வேறுவழி இல்லாமல் இங்கு வந்து இருக்கிறேன். அதற்கு இரண்டு காரணம். ஒன்று நிகழ்ச்சியை நடத்துவது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள். இரண்டாவது காரணம், நிகழ்ச்சி நடக்கின்ற இடம் தந்தை பெரியார் திடல். இந்த இரண்டும்தான் இங்கு வந்ததற்குக் காரணம். எனவே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நம் `திராவிட மாடல் அரசு’, `திராவிட மாடல் நாயகன்’ மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில், கடந்த மூன்றரை வருடங்களில் சிறப்பான ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

### 100 சதவிகித வெற்றி

சென்ற நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நமக்குத் தந்து இருக்கிறார்கள். நல்லாட்சி புரிந்ததற்கு ஒரு சான்றிதழைக் கொடுத்து இருக்கிறார்கள். 100 சதவிகித வெற்றியைக் கொடுத்து இருக்கிறார்கள். 40 க்கு 40 தொகுதிகள் வெற்றிபெற்று இருக்கிறோம். இப்போது அதைவிட மிகமிக முக்கியம் வருகின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல். அது உங்களுக்கே தெரியும்.

தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். ஆணையிட்டு இருக்கிறார். உறுதிமொழி கொடுத்து இருக்கிறார். `234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதி வெற்றி பெறுவோம்’ என்று சொல்லி இருக்கிறார். திராவிட மாடல் அரசு என்றால், என்ன என்று கேட்கிறார்கள். `எல்லோருக்கும் எல்லாம்’ என்பதுதான் திராவிட மாடல் அரசு. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இந்த நிகழ்ச்சி.

### `திராவிட மாடல்’ நிகழ்ச்சி

இந்த நிகழ்ச்சிகூட ஒரு `திராவிட மாடல்’ என்று சொல்லலாம். ஏனென்றால், இங்குப் பார்த்தீர்கள் என்றால், கழகத்தின் மூத்த முன்னோடிகள் 100 பேருக்குப் பொற்கிழி, 250 கல்லூரி மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 500 பெண்கள் அடங்கிய 50 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உதவித்தொகை, 100 திருநங்கைகளுக்கு உதவித்தொ கை, 10 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் என இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் மட்டும் 1,335 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை நம் சேகர்பாபு அண்ணன் அவர்கள் சென்னை கிழக்கு மாவட்டத்தில் ஏற்பாடு செய்துள்ளார் என்றால், வருகின்ற சட்டமன்ற தேர்தலுக்குத் தயார் ஆக வேண்டும். நம் கழகத்தின் திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்து, எப்போதுமே நம் சென்னை கிழக்கு மாவட்டம், `கழகத்தின் கோட்டை’ என்பதை உறுதி செய்ய வேண்டும். நிச்சயம் ஜெயிக்கப் போவது உறுதி. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த மூன்று நாட்களாக டெல்டா பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சி என்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்து இருக்கிறேன். மக்களிடம் அப்படியொரு எழுச்சி இருக்கிறது. குறிப்பாக, தாய்மார்களிடம் அப்படியொரு எழுச்சி இருக்கிறது. நிச்சயம் இந்த முறை, ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கப் போவது உறுதி. நம் கழகத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் தமிழ்நாட்டு மக்கள் உங்களின் ஒத்துழைப்பால் உட்கார வைப்பது உறுதி.

### தேர்தல் வேலைகள்

தேர்தல் வேலைகளை, தி.மு.க.தான் முதலில் ஆரம்பித்துள்ளது. நாம் தேர்தல் வேலைகளை ஆரம்பித்துவிட்டோம். எப்படித் தேர்தல் வேலையை முதன்முதலில் ஆரம்பித்துள்ளோமோ, அதேபோல் தேர்தல் முடிவிலும், நாம்தான் முதலில் வருவோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். யார், எப்படி வந்தாலும் பரவாயில்லை. உங்களின் எதிரணியில் இருக்கும் கூட்டணியைப் பற்றி உங்களுக்குத் தெரியும். `கள ஆய்வு’ நடத்துகிறோம் என்று சொல்லி, ஒவ்வொரு இடத்திலும் `கலவர ஆய்வு’தான் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எல்லா நிகழ்ச்சிகளிலும் சண்டை. ஆனால், நம் கூட்டணி மிகப்பெரிய வெற்றிக்கூட்டணி.

### வெற்றிக்கூட்டணி

நம் எதிரணியில் இருக்கின்ற அ.தி.மு.க-வின் பொருளாளர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் கள ஆய்வு கூட்டத்திலேயே சொல்கிறார். `கூட்டணிக்கு வாருங்கள்’ என்று சொன்னால், `ஒருவன் 100 கோடி கேட்கிறான். ஒருவன் 20 தொகுதி வேண்டும் என்கிறான். பேரம் பேசுகிறான்’ என்று வெளிப்படையாகவே பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், நம் கூட்டணி வெற்றிக் கூட்டணி.

நம் கழகத் தலைவர் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்றுள்ளோம். 100 சதவிகித வெற்றியைப் பெற்று இருக்கிறோம். அந்த வெற்றியை அடுத்தத் தேர்தலிலும் உறுதிசெய்ய வேண்டும் என்றால், இங்கு வந்திருக்கின்ற கழகத் தோழர்கள், உடன்பிறப்புகள், நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நம் வெற்றியை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேம்.

எனது பிறந்தநாள் விழாவில், இவ்வளவு சிறப்பான திட்டங்களை உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள் இல.பரந்தாமன், பிரபாகர்ராஜா, ஜோசப் சாமுவேல், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, ரங்கநாதன், மற்றும் கழக முன்னணியினர், விளையாட்டு வீரர்கள், ஏராளமான பொதுமக்கள் உள்பட கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்த நாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் ஏற்பாட்டில் கழகத்தின் 100 மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி, அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றார். மேலும், கல்லூரி மாணவ – மாணவியர் 250 பேருக்கு கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 50 மகளிர் சுய உதவிக்குழுக்கள், சுழல் நிதி 100 திருநங்கைகளுக்கு உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் என சுமார் 1400 பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.


